செய்தி வெளியீடு எண் 871 நாள் 17-10-08

தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ)
தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய வணிக வளாகம்
திருமங்கலம், சென்னை – 600 101.

**ஆதி திராவிடர் / பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய ஆதி திராவிட கிறித்துவ இளைஞர்கள் இந்தியக் குடிமைப் பணி பிராதனத் தேர்வுக்குத் தயார் செய்து கொள்வதற்கு நிதி உதவி**

தமிழ்நாடு அரசு அரசாணை எண்.93 / ஆதி (ம) ப.கு நலத்துறை (சிஉதி–1), நாள் 25.07.08 மற்றும் அரசு கடித எண்.2165/சிஉதி–1/08–1, நாள் 22.09.08ன் படி, மே 2008ல் நடைபெற்ற இந்தியக் குடிமைப் பணி முதன்மைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த ஆதி திராவிடர் / பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய ஆதி திராவிட கிறித்துவ இளைஞர்களுக்கு 2008–ஆம் ஆண்டு UPSCயில் நடத்தப்படவிருக்கும் இந்தியக் குடிமைப் பணி பிரதான தேர்வுக்கு தயார் செய்து கொள்வதற்கான செலவினை மேற்கொள்வதற்காக, தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ), ரூ.25,000/– (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்) ஊக்கத்தொகையாக வழங்க ஆணையிடப்பட்டது.

“இந்து' மற்றும் “தினத் தந்தி' நாளிதழ்களில் 25.09.2008 அன்று தகுதியுள்ள இளைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரி 15.10.2008 வரை விண்ணப்பங்கள் பெற கடைசி தேதியாக அறிவித்து விளம்பரம் வெளியிடப்பட்டது.

மொத்தம் 147 விண்ணப்பங்கள் பெறப்பட்டதில் 73 நபர்களுக்கு ரூ.18.25 இலட்சம் தொகைக்கான காசோலை 15.10.2008 மற்றும் 16.10.2008 தேதிகளில் நேரடியாக அளிக்கப்பட்டது. மீதமுள்ள 74 நபர்களுக்கு ரூ.18.50 இலட்சம் தொகைக்கான காசோலை விரைவு அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது.

17.10.08

மேலாண்மை இயக்குநருக்காக

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை 9